

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் நேற்று (20–10– 2024) மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணரின் புதல்வரும் , "தமிழரசு " இதழில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான மணிமன்றவாணன் அவர்களின் மறைவையொட்டி கலைஞர் நகரில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுடலுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, கே.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், சிறுபான்மை நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் உள்ளிட்டோர் உள்ளனர்.



முன்னாள் திருவள்ளூர் மாவட்ட கழக செயலாளரும் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் மிசா கும்மிடிப்பூண்டி கி.வேணு அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு கும்மிடிப்பூண்டியில் மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, தலைமையில் ஒன்றியச் செயலாளர் கி.வே.ஆனந்த்குமார், முன்னிலையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் திருவுருவப்படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்தினர். உடன் எம்.எல்.ஏ.க்கள் ஆ.கிருஷ்ணசாமி, கே.பி.சங்கர், ஐ.பரந்தாமன் மற்றும் இ.ஏ.பி.சிவாஜி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், சி.ஜெரால்டு, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், அன்புவாணன், ஜி.ஸ்டாலின், மு.பகலவன், மு.கதிரவன், எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், காயத்ரி ஸ்ரீதர், பா.செ.குணசேகரன், கே.சுப்பிரமணி, வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பொன்.விமல், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், மு.மணிபாலன், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், நா.பரிமளம், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, செல்வசேகரன், எம்.பொன்னுசாமி ஜான், ஜி.ரவிக்குமார், க.சு.தமிழ் உதயன், இரா.அறிவழகன், கே.அபிராமி குமரவேல், பி.முத்து, தங்கம் முரளி, ப.ச.கமலேஷ், மற்றும் குடும்பத்தினர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நெல்லை மாவட்டத்தில் நடைபெறும்

# பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து - துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு!

### அமைச்சர் கே.என்.நேரு மேற்கொண்டார்!

நெல்லை.அக்.21.

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு வண்ணார் பேட்டை அரசு விருந்தினர் மாளிகையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மாநகர காவல் ஆணையாளர் ரூபேஸ் குமார் மீனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், துணை மேயர் ராஜ் ஆகியோருடன் கலந்து ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மேலும் வடகிழக்கு பருவமழை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு செய்யப் பட்டது.

மாவட்டத்தில் நடைபெற்று வரும் அம்ரூத் குடிநீர் திட்டப் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.மேலும் மாநகராட்சி பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வர்த்தக மையக் கட்டிடம் வர்த்தக பயன்பாட்டிற்கு குறைந்த வாடகையில் வழங்குவதற்கும் மாநகராட்சியில் நடைபெற்று வரும் திட்ட பணிகளை விரைந்து முடிக்கவும், பொதுமக்கள் தேவையான புதிய திட்டப் பணிகளை உருவாக்கி அத்திட்டங்களையும் விரைந்து செயல்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்கு பருவமழை காலத்தில் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வண்ணம் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மாநகர காவல் துணை ஆணையர் அனிதா, வருவாய் கோட்டாட்சியர் கண்ணா கருப்பையா நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் விஜயலட்சுமி, உதவி இயக்குனர் பேரூராட்சிகள் வில்லியம் ஜேசுதாஸ், குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் ராமலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வ.பெ.சுரேஷ் தலைமை! கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# பெரம்பூர் - இரா.ஏழுமலை முதலாமாண்டு நினைவு நாள் - படத்திறப்பு!

### டி.கே.எஸ். இளங்கோவன் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைத்து அஞ்சலி!

சென்னை, அக். 21 -

பெரம்பூர் தொகுதி - வட்டக் கழக முன்னாள் அவைத் தலைவர் இரா. ஏழுமலை அவர்களின் முதலாமாண்டு நினைவு நாள் - திருவுருவப்படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (21-10-2024-திங்கட்கிழமை) மாலை 7 மணியளவில் எண்.20, நாகப்ப நகர், 2-வது தெரு, சி.பி. சாலை, சென்னை - 21 எனும் முகவரியில் நடைபெறுகிறது.



இந்நிகழ்ச்சிக்கு இராயபுரம் மேற்குப் பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் தலைமை வகிக்கிறார்.

எம்.கே. இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், அத்தோ பி.முனுசாமி, எஸ்.யுவராஜ், இரா. பொன்முடி, ஜெய் சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டக் கழக முன்னாள் செயலாளர் எஸ்.எம்.சாமி துவக்கவுரையாற்றுகிறார்.

அன்னாரது திருவுருவப் படத்தை, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கலாநிதி வீராசாமி எம்.பி. , ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., தா.இளைய அருணா, நா.மனோகரன், பி.டி. பாண்டிச்செல்வம், மு.கோபி, க.நாகம்மை, நா. சண்முகம், கி.ராஜேந்திரன், சிவகுமார், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, சம்பத் குமாரி, நெடுஞ்செழியன், ஜி.எஸ்.முருகன், இரா.மெய்யழகன், கே.முனுசாமி, பா. வேளாங்கன்னி, எல். பாலா லட்சுமணன், ஜெ. கௌரீஸ்வரன், இரா. பாலன், எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், எம்.எல்.ரவி,

எஸ்.ரமேஷ், எம். கிருஷ்ணன், ஜெ.குணாளன், பி.ரூபாவதி, எஸ். அசோக், ஏ.சாந்தகுமார், பி.சி.கோட்டி, தன்ராஜ், எம்.ஜானகிராமன், இ.மதிவாணன், ஏ.பாஸ்கர், ஏ.சக்திவேல், ஆகி பிரகாஷ், ஆர்.வாசு, க.ஜெயசீலன், எம்.எம்.செந்தில்குமார், டபுள்யூ ஏ.சார்லஸ், கே.கோபி, இ.ரகு, கோ. அண்ணாதுரை, எஸ்.குணசேகரன், க.கன்னியப்பன், ஸ்ரீதர், ஏ.சாந்தகுமார், ஜெ.தரணிதரன், சின்னதுரை, எஸ்.செல்வநாதன், ஆர்.பி.சேகர், ஆர்.சரசா, சி.தமிழ் தென்றல், டி.கலைவாணி, டில்லி ஒவியர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள்கழகமுன்னோடிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.

ஏ.அன்வர், எஸ்.சங்கர் ஆகியோர் நன்றி கூறுகின்ற னர்.

## எழும்பூர் தொகுதியில்

# 100 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நல உதவிகள்!

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, அக். 21 –

எழும்பூர் ரயில் நிலையம் முதல் நுழைவாயில் சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுநர்கள் முன்னேற்ற சங்கத்தின் (தொ.மு.ச.) ஏற்பாட்டில், காந்திஇர்வின் சாலை, எழும்பூர் ரயில் நிலைய தொ.மு.ச. ஆட்டோ நிறுத்தத்தில் நடைபெற்ற நலத் திட்ட உதவிகள் வழங்கிடும் விழாவில் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, அச்சங்க உறுப்பினர்கள் 100 பேருக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார்.

இவ்விழாவிற்கு அச்சங்கத்தின் தலைவர் எஸ்.ஜெலேந்திரகுமார், செயலாளர் எஸ்.தண்டபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், தொ.மு.ச. ஆட்டோ பிரிவின் சென்னை பெருநகரத் தலைவர் ஐ.சி.எப். துரை, தொ.மு.ச. சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சிம்பு என்ற எஸ்.பிரதாப்குமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமலக் கண்ணன்; அவைத் தலைவர் வெ.மருதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ. சிலம்பரசன், 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், புஷ்பராஜ், பிரம்மதேவன், கோமகன், எட்டு என்கிற விஜயகுமார், குணசேகர்;

எழும்பூர் ரயில் நிலையம் முதல் நுழைவாயில் சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுநர்கள் முன்னேற்ற சங்கத்தின் (தொ.மு.ச.) பொருளாளர் எஸ்.பிரதாப்குமார், துணைத் தலைவர் வி.ரமேஷ் ஜாக்கி, துணைச் செயலாளர்கள் எம்.ரமேஷ், எஸ்.சுந்தர், கௌரவத் தலைவர் முனியன், சங்கக் காப்பாளர்கள் ஜெ.மகேஷ்குமார், ஈ.சீனிவாசன், வேலா, ஜெயசீலன், எம்.ஜி.ஆர்., சங்க ஆலோசகர்கள் ஈ. ஜெயகுமார், ஈ.இளையபெருமாள், ஏ.திருநாவுக்கரசு, கே.மதன்குமார், எஸ்.ரகுநாதன், எஸ்.ராஜ்குமார், வ.எம்.ஜி., மற்றும் முரளி உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்குப் பகுதி, 95 வது வட்டம், சென்னை கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் ஜிம் முரளி தாயார் எஸ்.ரங்கநாயகியின் திருவுருவப் படத்திற்கு வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். 95 வது வட்டக் கழகச் செயலாளர் மா.அகிலன் தலைமை வகித்தார். உடன் வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர், 8 வது மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், மாமன்ற உறுப்பினர் சுதா தீனதயாளன், பொதுக்குழு உறுப்பினர் சாவித்திரி வீரராகவன், வட்டச் செயலாளர் ஆர்.தீனதயாளன், மு.சுரேஷ்பாபு, க.மணிமாறன், தே.தமிழ்வாணன், எஸ்.தில்லைவானி, கோ.மதிவாணன், கே.இளங்கோவன், ஜெ.கருணாமூர்த்தி, எஸ்.விஸ்வநாதன், க.விமலநாதன் சே.தீலிப்குமார், எல்.பரிமளம், மா.பாலன், பல.ரஞ்சித், மா.கதிரவன், அ.கண்ணன், இ.ஜானகிராமன், வி.நவீன், எஸ்.மோனிஷ், சி.பவானிசங்கர், மு.ரஞ்சித்குமார், மு.காட்சன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

## பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று

# புத்தகம் கட்டுநர் பயிற்சிக்கான அரசாணை விலக்கிக் கொள்ளப்பட்டது!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, அக். 21-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று, நேற்று முன்தினம் (19.10.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில் நடந்த பேச்சு வார்த்தையின் முடிவில் அரசாணை நிலை எண். 21, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-1.1)த் துறை, நாள். 20.09.2024, விலக்கிக் கொள்ளப்பட்டது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், நேற்று முன்தினம் (19.10.2024) சென்னை, தலைமை செயலகத்தில் தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது சம்பந்தமாக செய்தியாளர்களிடம் தெரிவித்ததா வது:-

தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு என்பது சற்று ஏறக்குறைய 10க்கும் மேற்பட்ட பார்வை குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் ஒருங்கமைப்பு ஆகும். அந்த வகையில் இந்த கூட்டமைப்பின் பிரதான கோரிக்கை பூவிருந்தவல்லி யில் உள்ள பார்வையற்றோருக்கான அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டுநர்கான பயிற்சி 21 நபர்களுக்கு வருடாவருடம் தரப்பட்டு வந்ததை நிறுத்தக்கூடாது என்பதாகும். இன்றைக்கு நூலக துறையை பொருத்தவரை, நவீன காலத்திற்கேற்ப மின் நூலகங்கலாகவும், நூல்கள் மின் மயமாக்கும் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அரசு அச்சகத்தில் நவீன ரக இயந்திரங்கள் நிறு வப்பட்டுள்ளதால், குறிப்பாக Gathering, Wire Stitching, Perfect Binding, Cutting Machine, Automatic Sewing, Automatic Folding, Collator Machine, Cover Punching Machine, Coating Machine போன்ற பல்வேறு அதிநவீன இயந்திரங்கள் பயன்பாட்டில் இருக்கின்ற காரணத்தினாலும் இந்த நூல் கட்டுநர் பயிற்சியை முடித்த பார்வையற்ற நபர்கள் இந்த நவீன இயந்திரங்களை இயக்க இயலாது என சம்பந்தப்பட்ட துறையினர் தெரிவித்ததாலும், இந்த பயிற்சிக்கான தேவை வழக்கொழிந்துவிட்டதாக கருதப்பட்டு, இதற்கு மாற்றாக பார்வையற்றோர்க்கு உகந்ததாக உள்ள பயிற்சியை வழங்க சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை முடிவெடுத்து, இப்பயிற்சியினை நிறுத்த அரசாணை பிறப்பித்தி ருந்தது. இதற்கு தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகளின் கூட்டமைப்பு தங்களின் எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு குறைவான அளவுக்கு ஒரு 21 பேர் மட்டுமே பயிற்சி பெறுகிறார்கள் என்றாலும், அது எங்களுக்கென்று இருக்கின்ற ஒரு பிரத்யேகமான பயிற்சி, அதை நிறுத்திடகூடாது என்கிற வகையில் தங்களுடைய கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கோரிக்கை வைத்தது மட்டுமல்லாது இது சம்மந்தமாக நீதிமன்றத்தையும் அணுகியிருக்கிறார்கள். இந்த நிலையில் வெளியிடப்பட்டிருந்த அரசாணையில் ஒரு நான்கு ஐந்து இடங்களில் அதற்கான காரணங்கள் சொல்லப்படுகிற போது அது பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் மனதை புண்படுத்துவதாக இருப்பதாக சம்மந்தப்பட்ட நம்முடைய கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது. இது சம்மந்தமான செய்தி இன்று காலை அறிந்தவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு இவ்வரசு பாதுகாப்பு அரணாக உள்ளது என்பதாலும் சமூக நலத்துறையின் கீழ் இயங்கி வந்த மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தன்வசம் வைத்துக்கொண்டுள்ளதாலும் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு வகையில் உதவ வேண்டும் என்ற நேச மனப்பான்மையோடு இருப்பதாலும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகிய என்னை இந்த கூட்டமைப்புடன் பேச பணித்தார்.



அதன்படி இக்கூட்டமைப்பினருடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போது ஒன்றிய அரசால் மாற்றுத்திறனாளிகளுக்காக ரூ.1225 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில், வேறு எங்கும் எப்போதும் இல்லாத அளவிற்கு 2024-25ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசால் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1370 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருந்ததை சங்க உறுப்பினர்களே பாராட்டினார்கள்.

தமிழ்நாட்டைப்போல வேறு எந்த மாநிலத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தோழமையோடு, நேச உணர்வோடு எந்த மாநிலமும் இல்லை என்பதை அவர்களுமே ஒப்புக் கொண்டார்கள். அந்த வகையில் முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் மனது புண்படக்கூடாது என்பதை கருத்தில்கொண்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் உயர் அலுவலர்களுடனும், சம்மந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள்கூட்டமைப்பினருடனும் இணைந்து பேசினோம். சம்மந்தப்பட்ட கூட்டமைப்பினர், முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு எத்தகைய சேவையினை வழங்கி வருகிறார்கள் என்பதை பட்டியலிட்டு சொன்னார்கள். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகள் வழங்கப்படும்போது ஒரிஜினல் தங்கத்தில்தான் 10 கிராம் அளவில் தங்க பதக்கங்களை தமிழ்நாட்டில் தருகிறார்கள், ஒன்றிய அரசின் விருதுகள் கோல்டு பிளேட்டட் ஆகத்தான் தரப்படுகிறது. அது ஒரிரு மாதங்களில் கருத்துவிடுகிறது என்கின்ற செய்தியினையும் சொன்னார்கள். மாற்றுத்திறனாளிகளின் நலனை ஒரு குறிக்கோளாக வைத்திருக்கும் இவ்வரசு பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் மனதை புண்படுத்தும் சில அம்சங்கள் உள்ளடக்கிய இவ்வரசாணையை திரும்ப பெற்றுக்கொள்ள கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து இந்த அரசாணை என்பது திரும்ப பெற்றுக்கொள்ளப் படுகிறது என தெரிவித்தோம். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். மேலும் சென்னை உயர்நீதி மன்றத்தில் இதுதொடர்பாக தொடரப்பட்ட பொது நல மனுவினை திரும்ப பெறுவதாக தேசிய பார்வையற்றோருக்கான கூட்டமைப்பின் தலைவர் மனோகரன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதோடு அவர்கள் இன்னொரு கோரிக்கையினையும் வைத்தார்கள். பேருந்துகளில் எங்களுக்கு இலவச பயணம் என்பது இருக்கின்றது, அப்படி பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும்போது நடத்துனர்கள் ஆன்லைனில் பதிவு செய்திருக்கிறீர்களா? என்று கேட்கிறார்கள், மகளிர் இலவசமாக செல்லும்போது எந்த கேள்வியும் கேட்பதில்லை, எங்களிடம் மட்டும் இந்த கேள்வி கேட்கிறார்கள் என்கின்ற வகையில் கோரிக்கையினை சொன்னார்கள், நானும் உடனடியாக சம்மந்தப்பட்ட துறை அமைச்சரிடம் கேட்டபோது அவர்களும் இதற்கு ஒரு சுமூக தீர்வு காணப்படும் என தெரிவித்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் மகிழ்ச்சி தருகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மிக விரைவில் இந்த சங்கத்தினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து நன்றியும் சொல்லவிருக்கிறார்கள்.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி.சிஜி தாமஸ் வைத்யன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திருமதி.எம்.லக்ஷ்மி, மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## தருமபுரி கிழக்கு மாவட்டம்

# பென்னாகரம் வடக்கு-தருமபுரி மேற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்டம், பென்னாகரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.சபரிநாதன் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக திரு. **ஆர்.வீரமணி** (மாக்கனூர், பென்னாகரம், தருமபுரி மாவட்டம்) அவர்கள் பென்னாகரம் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

தருமபுரி மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர். சேட்டு அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **டி.எல்.காவேரி** (வி.ஜெட்டிஅள்ளி, இலக்கியம்பட்டி ஊராட்சி, தருமபுரி மாவட்டம்) அவர்கள் தருமபுரி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாள ராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



எழும்பூர் ரயில் நிலையம் முதல் நுழைவாயில் சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுநர்கள் முன்னேற்ற சங்கத்தின் (தொ.மு.ச.) ஏற்பாட்டில், காந்திஇர்வின் சாலை, எழும்பூர் ரயில் நிலைய தொ.மு.ச. ஆட்டோ நிறுத்தத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழாவில் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, அச்சங்க உறுப்பினர்கள் 100 பேருக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார்.